இனிப்பு, சொக்கலேட்,
பிஸ்கட்
மற்றும்
பழவகைகள்
விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை
ரூபா
5-00
சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 04 செவ்வாய்க்கிழமை (20 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 297

கேக் தயாரிப்பு பொருட்கள்
மற்றும்
குளிர்பானத் தயாரிப்புகளைப்
பெற்றிட
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புலிகள்-அரசு பேச்சு ஆரம்பித்ததும் வடக்கிற்கு உடன் மின் விநியோகம்

மதிய உணவு வேளையில்

பாடசாலை மாணவருக்கு பால் வழங்கத் திட்டம்!

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வேளையின் போது ஒரு கிளாஸ் பால் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

பிரதமர் சந்திரிகாவுடன் கலந்துரையாடிய பின்னர் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சர் டி. எம். ஜயரத்ன தெரிவித்தார்.

பால் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

மில்கோ ஸ்தாபனம், கால்நடை அபிவிருத்திச் சபை என்பனவற்றின் மூலம் மாணவர்களுக்கு வழங்கத் தேவையான பாலினைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் பாலை கிராமப் புற பாடசாலைகளுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தை அமுல் செய்ய வசதியாக கிராம மட்டத்தில் பால் பண்ணைத் தொழிலை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

—இவ்வாறு அமைச்சர் ஜயரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-எ)

யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமையியல் தனித்துறை

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் முகாமையியல்துறை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

1980 தொடக்கம் முகாமையியல் பிரிவு, வணிகத்துறையுடன் இணைந்து ''வணிக முகாமையியல் துறை'' என்று இயங்கி வந்தது.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து முகாமையியல் பிரிவு தனித்துறையாக இயங்க பல்கலைக்கழகப் பேரவை அனுமதியளித்துள்ளது.

புதிய முகாமையியல் துறையின் தலைவராக திரு. எம். நடராசசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். இதே வேளை வணிகத்துறையின் தலைவராக திரு. வே. தேவராஜா பணிபுரிவார். கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் முயற்சியினால் புதிய துறை உருவாக்கப்பட்டது (ச)

கற்பிட்டியிலிருந்து சென்ற 4 வள்ளங்களில் கொள்ளை!

கடத்தப்பட்ட பயணிகள் விடுவிப்பு

கற்பிட்டியில் இருந்து மன்னாருக்குச் சென்ற 15 வள்ளங்களில் நான்கிலிருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையிடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வள்ளத்தில் சென்றுகொண்டிருந்த 16 பயணிகள் கடத்தப்பட்டு, பின்னர் மன்னார்ப் பகுதியில் விடுவிக்கப்பட்டனர் என்று ஆயுதப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

400 பக்கெட் சிமெந்து, வாளிகள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், நூறு பரல் மண்ணெண்ணெய், என்ஜின் ஒயில், அரிசி மற்றும் உணவுப்பொருட்களே கொள்ளையிடப்பட்டன என ஆயுதப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-எ-6)

சமாதான சூழ்நிலையால்

உல்லாசப்பயணிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, செப். 20

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுகளை நடத்த ஆயத்தம் செய்யப்பட்டு வருவதைத் தொடர்ந்து இலங்கைக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தை விட இவ்வருடம் அதிகமாக— சுமார் 20 ஆயிரம் உல்லாசப் பயணிகள்— இலங்கை வருவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 4 லட்சத்து 15 ஆயிரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஐ-எ]

மகாராஷ்டிர முதலமைச்சர் புலிகளுடன் தொடர்பாம்

சரத்பவார் மீது குற்றச்சாட்டு

பம்பாய், செப். 20

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் தற்போது மகாராஷ்டிர முதலமைச்சராக இருக்கும் திரு. சரத் பவார், விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்தார் என்று இந்தியப் பத்திரிகைகள் செய்தியை வெளியிட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் தங்கள் ஆதாயத்திற்காக விடுதலைப்புலிகள் பிரச்சினையை பயன்படுத்தி வந்தது போன்ற வியாதி தற்போது மகாராஷ்டிர மாநிலத்துக்கும் தொற்றிவிட்டதாக ஜூனியர் போஸ்ட் சஞ்சிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

அகில இந்திய ரீதியில் இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடத்தை சரத் பவார் பிடிப்பதற்கு முட்டுக்கட்டை போடும் முயற்சியாகவே அவர் விடுதலைப்புலிகளைச் சந்தித்தார் என்ற விவகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

மின்சாரசபைத் தலைவருக்கு அமைச்சர் அனுருத்த பணிப்பு

கொழும்பு, செப்ரெம்பர், 20

''அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை ஆரம்பமாகியதும் உடனடியாக வடபகுதிக்கான மின் சாரத்தை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும், அதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்யுங்கள்''— இவ்வாறு இலங்கை மின் சாரசபைத் தலைவருக்கு மின்சக்தி மற்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த உத்தரவிட்டிருக்கிறார்.

இலங்கை மின்சாரசபையின் தலைவர் லெஸ்லி ஹேரத் இத்தகவலை வெளியிட்டதாக ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமைச்சரின் உத்தரவுக்கு இணங்க—

அரசு -புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பித்ததும் வடக்கிற்கு மின்சாரத்தை வழங்கக் கூடியதாக பூர்வாங்க ஏற்பாடுகளைத் தாம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது வடக்கில் மின்விநியோகத்தை மேற்கொள்ளத் தேவையான ''டிரான்ஸ் போமர்கள்'' அனைத்தும் சேதமுற்றுப் போயுள்ளன. அவற்றைத் திருத்தவோ அல்லது புதியவற்றை மாற்றீடு செய்யவோ நீண்டகாலம் தேவைப்படும்.

அனுருத்த ரதவதத

இதனால்—

மின்சார விநியோகத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியிருப்பதைக் கவனத்தில் கொண்டு—

தற்போதைக்கு ''ஜெனரேற்றர்கள்'' மூலம் மின் விநியோகத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முன்னர் மின்சாரம் வழங்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் ''ஜெனரேற்றர்'' மூலம் மின்சாரத்தை விநியோகிக்கவும்—

அதே சமயம் அனைத்து ''டிரான்ஸ்போமர்''களையும் திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் தொடர்ந்து திலீபன் நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 20

தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டிய நிகழ்வுகள் குடாநாட்டில் நேற்று ஐந்தாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றன. மக்கள் தமது நாளாந்தக் கருமங்களில் ஒன்றாக திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் உணர்வு பூர்வமாக பங்குபற்றி வருவதை பரவலாக எங்கும் அவதானிக்க முடிகிறது.

நேற்று விடுமுறை நாளாக இருந்த போதும் பல இடங்களில் நடந்த அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நல்லூரில் நேற்று நடந்த உண்ணாவிரத நிகழ்வில் யாழ். ஆஸ்பத்திரி நலன்புரிச் சங்கத்தை சேர்ந்தோர் மற்றும் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மற்றும் பொது அமைப்புகளின் உறுப்பினர்களும், தனியார் கல்விநிறுவன மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கோட்ட மட்டத்தில் இரவு வேளை மின் ஒளியில் நடைபெறும் கலை நிகழ்வுகளை காண்பதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் அவ்விடங்களில் கூடியிருப்பதை காணமுடிகிறது. (ஐ-11-15-13-117)

தீர்வுக்கு முயற்சி ஒரு புறத்தில் நடக்க மறுபுறத்தில்

மீளக்குடியமர்த்தல்செயற்பாடு சுயேச்சையாகவே நடக்கும்!

அமைச்சர் அஷ்ரப் அறிவிப்பு

கொழும்பு, செப். 20

தமது சொந்த வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளின் விடயத்தையும், அவர்களை மீள்குடியமர்த்தும் விடயத்தையும் — இனப்பிரச்சினை, அதற்கான தீர்வு ஆகிய இரண்டுடனும் இணைக்காமல் தனித்துச் சுயேச்சையாகவே — பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கையாளும். புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பற்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டி ஒன்றின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஒருபுறம் நடந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே.க.வின் உளவாளியாக அமைச்சரவையில் டி.பி!

கொழும்பு, செப். 20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவையில் உளவாளி ஒருவர் இருப்பதாக, லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ் ரைம்ஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினர், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அமைச்சரவையில் இடம்பெறும் இரகசியங்களை அறியும் உளவாளியாக ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப் 20

மட்டக்களப்பு மாவட்டம் களுவான்கேணி பகுதியில் கடந்த சனி இரவு 8 மணியளவில் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான 2 ஆம் லெப். தாசன் அல்லது தாஸ் (சின்னாச்சி அன்னதாஸ் — மட்டக்களப்பு) என்பவர் வீரச்சாவடைந்தார். (ஐ)

ஜே. வி. பியின் செயலராக சோமவன்ஸ அமரசிங்கா

தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம்

கொழும்பு, செப் 20

ஜே. வி. பியின் பொதுச் செயலாளராக திரு. சோமவன்ஸ அமரசிங்காவை தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்துள்ளார்.

இத்தகவலை பிரதி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா வெளியிட்டார்.

ரோஹண விஜேவீராவின் தலைமையில் இயங்கிய ஜே. வி. பி அரசியல் குழுவில் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப் 20

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-8)

வடபகுதி மின்விநியோகம்; மதிப்பீட்டு வேலை ஆரம்பம்

கொழும்பு, செப் 20

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன;

வவுனியாவில் இருந்து புளியங்குளம் வரையான 15 மைல் தூரத்துக்குத் தேவையான மின்கம்பிகளின் மதிப்பீடு பற்றியும் அவற்றைப் பொருத்தும் பணிகள் தொடர்பாகவும் மின்சக்தி அமைச்சு ஆராய்ந்துள்ளது.

இதே வேளை வடபகுதி மின்விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து உயரதிகாரி ஒருவரும் அனுப்பப்பட்டுள்ளார் என அறியவருகிறது. (அ)

ஜனாதிபதித் தேர்தலில்

இடம் பெயர்ந்தோரும் வாக்களிக்க ஏற்பாடு

கொழும்பு, செப். 20

தமது சொந்த மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க விரும்பினால், இம்மாதம் 27 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்து வாழ்வோர் தாம் தற்பொழுது வசிக்கும் மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் —

இதற்கான அனுமதியைக் கோருவதற்கான விண்ணப்பப் படிவங்களை தேர்தல் அதிகாரிகளிடமும், பிரதேச செயலாளர்களிடமும், கிராம சேவை உத்தியோகத்தர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல விண்ணப்பங்களும் விண்ணப்பதாரர் தற்போது வசிக்கும் இடத்திற்கு பொறுப்பான கிராம சேவை உத்தியோகத்தரால் அத்தாட்சிப் படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கமும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்;

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

வடக்கு மக்கள் வழிபட கற்பூரம் எரிக்கக் கூடாதா?

கொழும்பு நீதிமன்ற நீதிபதி கேள்வி

கொழும்பு, செப். 20

வடபகுதி மக்கள் வழிபாட்டுக்கு கற்பூரத்தைக் கொளுத்தக் கூடாதா?

இப்படி வினா எழுப்பியிருப்பவர் வேறுயாரும் அல்ல, ஒரு நீதிபதி ஆவார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தர்மதாச ஜெயவிக்கிரமதான் அரச சட்ட வாதியை நோக்கி இவ்வாறு கேட்டிருக்கிறார்.

வடபகுதிக்குத் தடை விதிக்கப்பட்ட பொருட்களை கடத்திச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு பொலிஸாரை சரீரப்பிணையில் செல்ல அனுமதி வழங்கிய போதே நீதிபதி இதனைக் கூறினார்.

பாவிப்போடி சிவரட்னம், ஆறுமுகம் லோகநாதன் ஆகிய இவர்கள் கற்பூரம் உட்படத் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கடத்த முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

கற்பூரத்தடை ஏன் நீக்கப்படவில்லை என்று நீதிபதி அரச சட்டவாதியிடம் வினவினார்.

வெடிமருந்து தயாரிக்க அதுபயன் படுத்தப்படுகிறது என்று சட்டவாதி பதிலளித்தார்.

அப்பொழுதே நீதிபதி ஜெயவிக்கிரம நகைத்துக்கொண்டு அப்பகுதி மக்கள் கோயில் வழிபாட்டுக்குக் கற்பூரம் கொளுத்தக் கூடாதா'' என்று கேட்டார். (அ)

இடம்பெயர்ந்து இயங்கும் பாடசாலைக்குத் தீ!

மானிப்பாயில் இயங்கும் சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பகுதி நேற்று முன்தினம் தீக்கிரையானது.

இராணுவ நடவடிக்கை காரணமாக சாந்தைப் (பண்டத்தரிப்பு) பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததால், பிரஸ்தாப வித்தியாசாலை மானிப்பாய் சோதி வேம்படியில் உள்ள தனியார் வளவு ஒன்றில் இயங்கியது.

நேற்று முன்தினம் இரவு சுமார் ஒருமணியளவில் வித்தியாலய மண்டபத்தில் தீ பரவியது எனினும் அயலில் வாழ்வோரின் முயற்சியால் மண்டபம் முற்றாக எரிந்து போகாமல் தடுக்கப்பட்டது.

விஷமிகள் சிலரே பாடசாலைக்கு தீ வைத்திருக்கவேண்டும் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (அ-90)

உள்ளூர் பயணிகள் சேவைக்கு

இலங்கையில 'லயன்எயர்' தனியார் விமான நிறுவனம்

இலங்கையில் ''லயன்எயர்'' என்ற பெயரில் தனியார் விமான நிறுவனம் ஒன்று உள்ளூர் பயணிகள் சேவைகளை நடத்தவிருக்கிறது.

முன்னாள் சோவியத் குடியரசான கஸகிஸ்தான் குத்தகை அடிப்படையில் வழங்கிய இரண்டு அன்ரநோவ் விமானங்களே இச்சேவைக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

வவுனியா, அம்பாறை, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, சிகிரியா, வீரவில, கொக்கல ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இச்சேவை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

ஆழம் காணமுடியாத கிணறு போன்றுள்ளது திறைசேரி!

இப்படிக் கூறுகிறார் சந்திரிகா

கொழும்பு, செப். 20

திறைசேரி, ஆழம் காண முடியாத கிணறு போன்றுள்ளது.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திறைசேரி நிலவரம் பற்றி விசாரிக்கையில் —

''எவ்வளவு பற்றாக்குறை என்று அதிகாரிகளைக் கேட்டேன். அதிகாரிகள் முதலில் ஆயிரத்து 300 கோடி ரூபா என்றார்கள்; இரண்டு தினங்கள் கழித்து 2 ஆயிரத்து 200 கோடி ரூபா என்றார்கள் கடைசியாக 5 ஆயிரத்து 300

(4ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுக்கள் தோற்றால் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தலாம்

படை அதிகாரிகள் அச்சம்

கொழும்பு, செப். 20

உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தை தோற்றால் — அல்லது பேச்சுகள் நடத்துவதற்கு அரசைத் தூண்டும் முயற்சி தோல்வி கண்டால் — விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளலாம்.

பாதுகாப்பு படை அதிகாரிகளை மேற்கோள்காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

விசேட படை நடவடிக்கைப் பிரிவுகளைச் சேர்ந்த போராளிகளுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைத்தலம் முகாம்களில் வைத்து பயிற்சி அளித்து வருவதாக வடபகுதியில் நிலை கொண்டுள்ள சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி த ஐலண்ட் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ-எ)

குடாநாட்டில் கடும் வரட்சி

யாழ்ப்பாணம், செப். 20

குடாநாட்டில் மழை பெய்யாமையால் கிணறுகளின் நீர்மட்டம் குறையத்தொடங்கியுள்ளன.

மழை பெய்யாமல் இருப்பதும், கடும் காற்று வீசுவதும் வரட்சி நிலைமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. (ந-11)

மாத்தளையிலும் புதைகுழி மனித எலும்புக்கூடுகள் மீட்பு

கொழும்பு, செப். 20

மாத்தளையில் இறுதானிய பயிர்ச் செய்கை பண்ணைக்கருகில் கொக்கோ பயிரிடப்பட்டுள்ள காட்டுப்பகுதியில் புதைகுழி ஒன்றில் இருந்து மூன்று மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

1990 ஆம் ஆண்டில் தலைகளின்றி வீதியில் கிடந்த மூன்று மனித சடலங்கள் இப் புதைகுழியில் புதைக்கப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்தது.

மாத்தளை நீதிவான் சாமினி விஜேதுங்கா முன்னிலையில் எலும்புக் கூடுகளை பொலிஸார் மீட்டெடுத்தனர்.

ஜே. வி. பி. வன்செயல்களின் போது கொல்லப்பட்ட இளைஞர்களின் எலும்புக் கூடுகளே இவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த எலும்புக் கூடுகள் யாருடையவை என அடையாளம் காணப்படுவதற்காக மாத்தளை பொலிஸ் நிலையத்தில் தற்போது வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அடையாளங் காணுவதற்கு உதவும்படி பொலிஸார் பொது மக்களைக் கேட்டுள்ளனர். இது தொடர்பான மேல் விசாரணை நாளை மாத்தளை நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது. (எ-ச)

பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். வண்ணை வைத்தீஸ்வர கோயிலைச் சேர்ந்த கோப்பாய் சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்களின் சேவையைப் பாராட்டி சாவகச்சேரி நுணாவிற்பதி கொல்லங்கிராய் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின் போது "வேதாகம இரியபானு" எனும் பட்டம் வழங்கப்பட்டது. [•]

நெற்செய்கை கடன் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். மாவட்டத்தில் அடுத்து வரும் 95 கால போகத்தில் நெற்செய்கையை மேற்கொள்ளவிருக்கும் 1,200 விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நெற்செய்கையை மேம்படுத்துமுகமாக கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக வழங்கப்படும் இக்கடன்கள் மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ)

இலவச சீருடை

தென்மராட்சி, செப். 20

பளை கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகள் கடந்த புதன்கிழமை சகல பாடசாலைகளிலும் வழங்கப்பட்டன. (ஓ-117)

வன்னியில் நடைபெற்ற மாணவர் எழுச்சிப் பாசறை

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் மாணவர் எழுச்சிப் பாசறை வன்னி மாவட்டத்தில் விசுவமடு என்னுமிடத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

இந்த எழுச்சிப் பாசறையில் வன்னி மாவட்டத்தில் இருந்து 80 மாணவர்களும், யாழ்., மன்னார், முல்லை மாவட்டங்களில் இருந்து தலா 10 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் தனி ஆளுமையை விருத்தி செய்யவும், மாணவர்கள் சமூகத்துக்கு உரியவர்களாக மாற்றப்படவும், சொந்த காலில் நின்று செயற்படவும் ஏதுவாக இப் பாசறை நிகழ்வுகள் அமைந்தன.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சகல கோட்ட, மாவட்ட பொறுப்பாளர்களும் இப் பாசறையில் கலந்து கொண்டனர். இப் பாசறை மாவட்ட ரீதியாக தொடர்ந்து நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் எழுச்சிப் பாசறையின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், கிளை நடுவப் பணியக பொறுப்பாளர் திரு. எழிலரசன், வன்னி, முல்லை மன்னார் மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. நாவண்ணன், வன்னி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு ஞானம், வன்னி மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. செல்வம், வன்னி மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ஜெனி, கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. பரணிதரன், விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர், கண்டாவளைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. குருகுலராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன் சபாபதி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

வடமராட்சி கணபதி சிலை கண்டியில் மீட்கப்பட்டது?

கண்டி மாவட்டம் — உடுநுவர ரங்கம என்னுமிடத்தில் சிற்பவேலை செய்யும் கலைஞர் ஒருவரிடம் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட வெண்கலத்திலான விநாயகர் சிலை ஒன்று வடமராட்சியில் உள்ள கோயிலைச் சேர்ந்ததா என்று சந்தேகிக்கப்படுகிறது.

1985 ஆம் ஆண்டில் அனுராதபுரத்தில் உள்ள வியாபாரி ஒருவரால் சிறு தொகைக்கு வாங்கப்பட்ட இச்சிலை, பின்னர் உடுநுவர ரங்கம பகுதியில் உள்ள சிற்பக் கலைஞருக்கு விற்கப்பட்டது.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு இணங்க இச்சிலை கைப்பற்றப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

26 கிலோ கிராம் எடையுள்ள இரண்டு அடி உயரமான இச்சிலையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது இச்சிலை படையினரிடம் சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ)

குளங்கள், வாய்க்கால்களை புனரமைக்க நடவடிக்கை

யாழ். குடாநாட்டின் நீர்வளத்தைப் பேணி பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் குளங்கள், வாய்க்கால்களைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கட்டுடை [illegible] நாவலர்ச்சோலை [illegible] கால், தலங்கினைப்பு வில்லியம்பிடி உவர் நீர் தடுப்பணை, சிறுப்பிட்டி உரத்திர் தடுப்பணை களத்தின் குளம், சிரவின் குளம் போன்றவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்வளத்தைப் பேணும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நடவடிக்கையினால் ஏராளமான விவசாயிகள் நன்மையடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோழிகளுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, செப். 19

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பணிமனையில் வாரத்தில் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் கோழிகளுக்கு நோய்த்தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நூறு கோழிகளுக்கு மேல் நோய்த்தடுப்பூசி ஏற்ற விரும்புபவர்கள் கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொண்டால் அந்தந்தப் பிரிவு பொது ஸ்தாபன கட்டடங்களில் நோய்த்தடுப்பூசி ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

குடிமனைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப். 20

வடமராட்சி கிழக்கில் 50 குடிசைகளை இணைந்த செஞ்சிலுவை சங்கத்தினர் யாழ். கிளை புனரமைத்துக் கொடுத்துள்ளது.

இம்முகாமில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர் (இ-17)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இன்ரகொம் (Intercome) ஸ்ரேபிலைசர் 3 K.V. 250W பற்றறி சாஜ்ஜர் (20V 2A 75W) CCTV Lens (நாஷனல் வீடியோ கமராவுக்கு உரியது) சாம்சிவா மகிழ் ரேட் சென்ரர், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (32950)

சுன்னாகம் சந்தைரோட் வீதியில் [ஐயனார் சனசமூக நிலையம் முன்பாக] வீடும் வளவும் [நெல்பரப்பு 3] விற்பனைக்குண்டு. தகவல்: இ. குணம், 43, மார்க்கட் சுன்னாகம். [7645]

பிரிமா புறொயிலர் குஞ்சுகள் ஆறு நாட்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவை விற்பனைக்குண்டு. கோழிக்குஞ்சுகள் ஓடருக்கு எடுத்துக்கொடுக்கப்படும். தொடர்பு: சி. குகசிங்கம், இல. 9, நல்லூர் வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். [32948]

உடன் தேவை

திறமையாக உடுப்புக்களை "அயன்" செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: நகர சலவையகம் (சித்தி ரெயிலர்ஸ்), இராசன் சாலை, ராணி தியேட்டர் முன்பாக, யாழ்ப்பாணம். (32960)

A/L - 95

A/L 95 பரீட்சைக்கு உதவியாக வெளிவந்து விற்பனையாகின்றது A/L வகுப்புக்குரியது. மனித உயிரியல் Human Biology) உயர்தர வினாவிடை (பரீட்சை வழிகாட்டி) ஆக்கம் M. P. Sellavel B. sc. சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். மக்கிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீ காந்த்புத்தகசாலை, யாழ். நல்லூர். (இ/9177)

மணிக்கூடுகள் திருத்தல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டிக்சோ வாச் அன் றேடியோ சேர்க்கஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-9043)

காணல்

கே. டானியலின் கானல் கல்வியல் கட்டுரைகள் சோ சந்திரசேகரம் தமிழ் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பங்கு ஆக்கம்; பேராசிரியர் சிவத்தம்பி. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [அ-9154]

தவறிவிட்டது

ஒரு பவுண் கைச்சங்கிலி 18-9-94 காலை சுன்னாகம் சிவன்கோவிலுக்கும் கொத்தியாலடி மயானத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுன்னாகம் தர்க்கா புத்தகசாலையில் ஒப்படைக்குமாறு கோருகிறேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. யோகப்பிரகாசம். சுன்னாகம். (32954)

உடுவில் மகளிர் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு

G. A. Q. - 95
யாழ்ப்பாணம் / பேராதனை

எல்லாப் பாடங்களுக்குமான
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

ENGLISH - LITERATURE
ஆரம்பம்: 01 - 10 - 1994
3 மணி

— பதிவாளர்.

[இ-9142]

ஆனந்த் காணொலி கலையகம்
UEDIO ANANTH STUDIO

கொம்பியூட்டர் மிக்ஸிங் கமரா மூலம் உங்கள் மங்கள வைபவங்களைச் சிறந்த முறையில் வீடியோ பிடித்திடவும் மிக்ஸிங் முறையில் கலர்ப்படம் பிடித்திடவும் இன்றே நாடுங்கள்

❋ எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

இதுவரை எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொண்ட நாடாப் பிரதிகளை கால தாமதமின்றி 21ஆம் திகதிக்கு முன் எம்மிடம் ஒப்படைக்கவும். தவறின் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்!

VEDEO ANANTH STUDIO
MANIPAY.

(7923]

தியாகி திலீபன்
7ஆம் ஆண்டு நினைவு விழா

இடம்: ரசிக ரஞ்சன சபா மண்டபம்
(பெருமாள் கோயிலடி)

காலம்: 21 - 09 - 1994
புதன்கிழமை மாலை 5-00 மணி

விசேட கலை நிகழ்ச்சிகளுடன்
பட்டி மண்டபம்

"நாமிருக்கும் நாடு நமது என்று உணர்ந்து விட்டோமா?'

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ் கோட்டம்.

[சி-9205]

யாழ் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக்
கல்லூரி

முக்கிய அறிவித்தல்

1993 / 94 முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடப் பயிற்சி நெறி நுழைவு பரீட்சை 28 / 9 / 94 புதன்கிழமை அன்று ஆரம்பமாகும். மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் தவறாது பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

1992 / 93 முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடப் பயிற்சி நெறி பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேற்படி பரீட்சையில் நான் சித்தி அடைந்தோரும் சித்தி அடையாதோரும் 28 / 9 / 94 அன்று நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு தோற்ற விரும்பினால் 23 / 9 / 94 வெள்ளிக்கிழமைக்கு முன் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்.

(சி / 9209)

❋ அடையாள அட்டைகள் (I. C.)
❋ வாகன வரி அனுமதிப்பத்திரம் (Tax)
❋ பெறுமதிமிக்க ஆவணங்கள் முதலியவற்றை நீடித்த பாவனைக்கு ஏற்ற வகையில்

சகல அளவுகளிலும் கவறிங்
(LAMINATION)
செய்து கொள்ள நாடுங்கள்.

சன்லைற் றைக்கிளீனேர்ஸ்
(சூரியப் பிரகாஸ்)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை:
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

[சி-9125]

யுத்த நிறுத்தத்தின் தடைகள் நீங்கிட
யுத்தக் கடவுளின்
அருள் வேண்டி
விடி விளக்குகள்-108

இடம்: சுழிபுரம் பறளாய் முருகன் தேவஸ்தானம்

காலம்: 24 - 09 - 1994
கார்த்திகைத் திருவிழா அன்று

பிற்பகல் 3.00 — ஸ்நபனாபிஷேகம்
பிற்பகல் 4-00 — கார்த்திகைத் திருவிழா விசேட பூஜை வழிபாடுகள்
பிற்பகல் 4-30 — முருகப்பெருமான் வீதி உலா வருதல்
பிற்பகல் 5-15 — பக்திப் பாடல்கள்
பாட்டு — செல்வி பி சோழலக்ஷ்மி
தாளம் — செல்வன் பி சோழகுமாரன்
மிருதங்கம் — செல்வன் பி. சோழராஜன் (வயது-4)
பிற்பகல் 5-45 — பண்ணிசைக் கச்சேரி
அளவையூர் பண்ணிசை மணி எஸ். சிவானந்தராஜா அவர்கள்
பிற்பகல் 6-15 மணியளவில் —
பல அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க விஸ்வப் பிரம்மஸ்ரீ சந்திரமோகனின் கமலாலயம் குழுவினர் வழங்கும்
'வள்ளி திருமணம்' வில்லிசை
இரவு 7-00 — விடிவிளக்குகள் ஏற்றல்
இரவு 7-30 — வீடியோ படக்காட்சி
(ஈசுர விநாயகரின் பாதகாவடிகளும் சதுர்த்தி விழாவும்)

★ அனைவரையும் அழைக்கின்றோம். ★

சோழியூரான் குடும்பம்,
திருவிழா உபயகாரர்.

விளம்பர அன்பளிப்பு:
சோழியபுரம் பத்ம வெளியீடு

[32964]

அகில இலங்கைத் தமிழ் மாமன்றம்
முக்கிய அறிவித்தல்

எமது மன்றத்திற்கும் இருபாலை தமிழ் மாமன்றத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதையும், எமது மன்றத்தின் இருபாலை சேவையின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென்பதையும், திரு. க. ஜீவமோகன் எமது மன்ற காப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதையும் இத்தால் அறியத்தருகிறோம்.

எனவே மேலே கூறப்பட்டவருடனோ, அமைப்புடனோ எமது மன்றம் தொடர்பாக தொடர்பு கொள்ளவேண்டாம் எனத் தெரியப்படுத்துகிறோம். எமது மன்றம் நடத்திய போட்டிகளின் பரிசளிப்பு விழா ஒக்டோபர் மாதம் நடைபெறும்;

நன்றி.

தலைவர். பொதுச் செயலாளர்.

(32966)

அச்சக முகாமையாளர் தேவை

பிரபலமாக இயங்கி வரும் அச்சகம் ஒன்றிற்கு அச்சகத்துறையில் அனுபவம் உள்ள முகாமையாளர் தேவை. தகைமை விபரங்களுடன் 27—09—94 இற்கு முன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கைத்தொழிற் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தாவடி.

(இ-9207)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

வழிக்குக் கொண்டு வருக

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது அரசாங்கத்துக்குரிய வேலையாகும். பாதுகாப்புப்படையினர் தமது கடமையை விட்டு விட்டு, பேச்சுவார்த்தைகளைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.....

இவ்வாறு இராணுவத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இரண்டு பெரும் தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியிட்ட அதே உயரதிகாரியே தமது நிலையை நியாயப்படுத்துவதற்காக முன்கண்டவாறு கூறியுள்ளார்.

இவரைப் போலவே சிந்திக்கும் இன்னும் பல அதிகாரிகள், படைகளில் இருப்பார்கள் என்று இலகுவில் எதிர்பார்க்கலாம். இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு. பேச்சுவார்த்தைகள் நடத்தி சமாதானத்தை ஈட்டுவது என்ற விருப்பத்துடன் புதிய அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், அதற்கு தடைபோடவும், தொல்லை கொடுக்கவும் இராணுவத்தில் பலர் இருக்கிறார்கள் என்று பிரதமர் சந்திரிகாவையும் அவரது அரசையும் எச்சரிப்பதாக குறிப்பிட்ட உயரதிகாரியின் கருத்து உள்ளது.

தமது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய சக்திகளில் முதலிடம் வகிப்பது இராணுவமே என்பதை பிரதமர் அறிந்திருக்கிறார்; உணர்ந்திருக்கிறார். அதனாலேயே அவர் தாமே நேரில் படை அதிகாரிகளைச் சந்தித்து, சமாதானத்தை உருவாக்க ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அது மட்டுமன்றி வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கு— போர் முனையில் உள்ள முகாம்களுக்கு — பிரதி பாதுகாப்பு அமைச்சரும், முன்னாள் இராணுவ அதிகாரியுமான ரேணுக அனுருத்த ரத்வத்தையை அனுப்பி அரசின் சமாதான முயற்சி குறித்து விளக்கமளிக்கச் செய்துள்ளார்.

சமாதான முயற்சி சம்பந்தமாக படையினரைச் சாந்தப்படுத்தும் விதத்திலும், சில வேளைகளில் அவர்களை "தாஜா" செய்யும் பாணியிலும், அவர்களுக்குச் சார்பாக நின்று பேசுபவராகவும் பிரதி அமைச்சர் பல்வேறு பிரசங்கங்களையும், உத்திகளையும் கையாள்வது தெரிகிறது.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக அரசாங்கத்துக்குச் சமாந்தரமாக இயங்கும் ஓர் அமைப்பாக இராணுவம் வளர்ந்து விட்டது உண்மை: முந்திய அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடியதால் இராணுவத்துக்கு "பாலும் தேனும்" ஊட்டி வளர்த்து விட்டிருக்கிறது. இச் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கு இவ்வாறு தான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தி கட்டளையிடும் அளவுக்கு (Dictating Terms) இராணுவம் வளர்ந்திருந்தது. எனவே அதனைக் கையாள்வது சிறிது கடினமே;

அத்தோடு —

இராணுவம் தனது போக்கில் செல்வதற்கு புதிய அரசும் அனுமதிக்குமானால், படைகளுக்குப் பயந்து செயற்பட முனையுமானால், சமாதானத்தை எட்டுவது என்பது கானல் நீராகி விடும். இராணுவம் அரசாங்கத்துக்குப் பணிந்து நடக்கும் அமைப்பாக மாற்றப்பட வேண்டும். இராணுவத்தின் சமாந்தரத் தன்மையையும், மேலாதிக்கத்தையும் உடனடியாக வெட்ட வேண்டும்.

அதனை ஆரம்பிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடக்க சுமுகமான சூழ்நிலை அத்தியாவசியமாகும். போர் நிறுத்தம் ஒன்றே உண்மையான, முழுமையான சுமுக நிலையைத் தோற்றுவிக்கக் கூடியது எனவே அரசு போர் நிறுத்தத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

அதன் மூலம் ராணுவத்தை வழிக்குக் கொண்டு வருவதாகவும் பேச்சுவார்த்தைக்கு சுமுக நிலையைத் தோற்றுவிப்பதாகவும் அமையும். ஒரு கல்லில் இரு கனிகளைப் பறிக்கலாம்! அம்மையார் சந்திரிகா?

ஹெய்ட்டிராணுவ ஆட்சியாளர்கள் ஒக்.15க்குமுன் பதவி துறப்பார்கள்

கார்ட்டரின் முயற்சி வெற்றி

வாஷிங்டன், செப். 20

கரிபியன் தீவான ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்கள் பதவியில் இருந்து விலகுவதற்கும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து ஹெய்ட்டி மீதான அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் படை எடுப்பு கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்டு விட்டுவிட்டது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தலைமையிலான அமெரிக்கக் குழுவினருக்கும் ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர் ரவுல் செட்றாஸுக்கும் இடையில் ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட் ஒப் பிறின்ஸில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேற ஒக்ரோபர் 15ஆம் திகதி நாள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் திகதிக்கு முன்னர் அவர்கள் பதவி துறந்து விட வேண்டும். அதற்கு முன்னர் ராணுவ ஆட்சியாளர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கும் தீர்மானம் ஒன்றை ஹெய்ட்டி நாடாளுமன்றம் நிறைவேற்றும்.

தற்போது அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ள ஹெய்ட்டியின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜீன் பேர்ட்ரண்ட் அரிஸ்ரைட் ஹெய்ட்டி திரும்பி ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

1990இல் ஹெய்ட்டியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்த அரிஸ்ரைட் 1991இல் இடம்பெற்ற ராணுவப் புரட்சியின் போது ராணுவத் தளபதி ரவுல் செட்றாஸினால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

அரிஸ்ரைட்டை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கும் ரவுல் செட்றாஸை பதவி இறக்கவும் கடந்த மூன்று ஆண்டுகளாக அமெரிக்கா மேற்கொண்ட முயற்சி தற்போது தான் பலன் அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் கடந்த வியாழக்கிழமை ஹெய்ட்டியின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஜிம்மி கார்ட்டர் தலைமையிலான குழு கடைசி நேர முயற்சியாக ஹெய்ட்டி சென்று சமரச முயற்சியில் ஈடுபட்டது.

பன்னாட்டுப் படைகளின் படை எடுப்பு இடம்பெற இருந்த சமயம் பதவியில் இருந்து விலக ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் தற்போது இணங்கி உள்ளனர்.

ஆட்சி மாற்றத்துக்குத் தேவையான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஹெய்ட்டியில் தங்கியிருப்பதற்கும் ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். (இ)

இரவுவேளையில் மரங்களை வெட்டி அழிக்கும் விஷமிகள்

குருநகர், செப். 20

காக்கைதீவு குடாப் பகுதியில் அமைந்துள்ள நவாலி மீனவர்களின் இறங்கு துறையில் நிழலுக்காக நாட்டப்பட்டிருந்த பூவரசம் மரங்கள் இரவு வேளைகளில் விஷமிகளால் வெட்டி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று யாழ். கல்லுண்டாய் வரையோரப் பகுதிகளிலும் பெருவாரியான நிழல் தருமரங்கள் இரவு வேளைகளில் விஷமிகளால் வெட்டி அழிக்கப்படுகின்றன.

இவ்வாறு அழிவு வேலைகளில் ஈடுபடுவோரைக் கண்டித்து மரங்களைக் காக்கவும், அப்பகுதிகளில் மேலும் பயன் தருமரங்களை நாட்டி வளர்க்கவும் முடியாதிருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ-51)

கிளித்தட்டு சுற்றுப்போட்டி; அதிபர்களுக்கு பணிப்புரை

யாழ்ப்பாணம், செப்: 20

கல்வித் திணைக்கள வலயம் இரண்டில், இவ்வாண்டு பாடசாலை அணிகளுக்கு இடையே கிளித்தட்டுப் சுற்றுப் போட்டியினை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளூர் விளையாட்டுக்களை ஊக்குவித்து வளர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் இப்போட்டியில் சகல பாடசாலைகளும் கலந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அதிபர்களுக்கு பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

யாழ். நூலகத்தை மீண்டும் புனரமைப்பதற்கு முயற்சி

அமைச்சர் லக்ஷ்மன் தெரிவிப்பு

கொழும்பு, செப். 20

எரிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையத்தை மீண்டும் கட்டுவதற்கு தேவையான நிதி மற்றும் பொருளுதவிகளைப் பெறுவதற்காக யுனெஸ்கோ மற்றும் தொல்பொருள் மற்றும் புராதன இடங்கள் சம்பந்தமான சர்வதேச கவுன்சில் ஆகியவற்றின் உதவி நாடப்படும்.

கலாசார, மத விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி கடந்தவாரம் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள கந்தரோடை பௌத்த புராதன இடத்தை புனர் நிர்மாணஞ் செய்து, பாதுகாப்பதற்காகவும் யுனெஸ்கோ மற்றும் சர்வதேச அமைப்புகளின் உதவி பெறப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இம் மாநாட்டில், புராதன நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்கள் சம்பந்தமான சர்வதேச அமைப்பின் தலைவர் றோலண்ட் சில்வா கலந்து கொண்டார்.

கந்தரோடை பௌத்த தல அபிவிருத்தித் திட்டம் பற்றிய ஆவணத்தை அமைச்சர், திரு. றோலண்ட் சில்வாவிடம் கையளித்தார்.

"இத் திட்டத்தை நாங்கள் செய்து தருவோம்"— என்று திரு. சில்வா அமைச்சரிடம் தெரிவித்தார். (இ-எ)

சப்ரகமுவ மாகாணசபையும் பொலிஸ் அதிகாரம் கேட்கிறது

கொழும்பு, செப். 20

ஐக்கிய தேசியக்கட்சியின் நிர்வாகத்தில் உள்ள சப்ரகமுவ மாகாணசபையும் மாகாண முதலமைச்சருக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கும்படி ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவைக் கேட்டுள்ளது.

மாகாணப் பொலிஸ் சேவையை மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று முதலமைச்சர் எச். ஆர். புஞ்சி நிலாமே முன்மொழிந்த பிரேரணை, அண்மையில் நடந்த சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வட மத்திய மாகாண சபையின் கீழ் மாகாண பொலிஸ் சேவையைக் கொண்டு வருவது என்று மாகாண அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் மகிந்தசோமா ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்த ஒரு வாரத்தின் பின் சப்ரகமுவ மாகாண சபையும் இம் முடிவை எடுத்திருக்கின்றது.

எனினும் பொலிஸ் அதிகாரங்களைக் கோருவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் இல்லை என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது. (இ-எ)

வடக்கு-கிழக்குக்கு ஒதுக்கும் நிதி அங்கேயே செலவிடப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், செப் 20

★ வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு புனரமைப்புக்காக ஒதுக்கப்படும் நிதியை அந்த மாகாணத்திலேயே செலவிட வேண்டும்; எக் காரணம் கொண்டும் அந்த நிதியை வேறு இடங்களுக்கு செலவிடக்கூடாது.

★ வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை ஏனைய பகுதிகளில் பாரிய திட்டங்களை மேற்கொள்ள நிதி வழங்கப்படமாட்டாது.

உலக வங்கி நிபந்தனை

மேற்கண்டவாறு உலக வங்கி இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

உலகவங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. ரொபேர்ட்டோ பென் ஜெரோசட் உலக வங்கியின் இந்த நிலைப்பாட்டை இலங்கை அரசிற்கு [illegible] துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றிருந்த கல்வியாளன் ஒருவருடன் நடத்திய கலந்துரையாடலின் போது அந்த அதிகாரி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நிலைமைகளை கேட்டறிந்த அவர் அடுத்த வருடம் வடக்கு [illegible] புனரமைப்பு [illegible] தாராளமாக நிதி வழங்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் அடுத்தமாதம் நடக்கும் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை பிரதமர் சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்ள விரும்புவதாகவும்—

அந்த மாநாட்டிலிலும் இலங்கைப் பிரதமரிடம் உலகவங்கியின் நிலைப்பாடு விளக்கப்படும் என்றும்— அந்த அதிகாரி தெரிவித்தார்.

1980 ஜூலை வேலை நிறுத்தம்

தனியாருக்கும் நிவாரணம் வழங்குமாறு பிரேரணை

கொழும்பு, செப்: 20

1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்கக் கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப் போவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தேசியப்பட்டியல் எம். பி. யான பட்டி வீரக்கோன் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

1980 ஜூலைவேலை நிறுத்தத்தில் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு பல வகைகளிலும் நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன மேலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்கும்படி பிரதமர் சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

எனினும் 1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியருக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் இன்றி நிவாரணம் வழங்க முடியாதுள்ளது. இதனை நீக்கவே தாம் தனிநபர் பிரேரணை கொண்டு வந்திருப்பதாக திரு. வீரக்கோன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-எ)

அம்புலன்ஸ் திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம் செப். 20

நீண்டகாலமாக பழுதடைந்திருந்த சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் திருத்த வேலை தற்போது நடைபெற்று வருகிறது.

அம்புலன்ஸை திருத்துவதற்குத் தேவையான உதிரிப்பாகங்களை அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவபாதம் எடுத்து வந்துள்ளார்.

திருத்தவேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருவதால் மிக விரைவில் சாவகச்சேரி பகுதி நோயாளர்களுக்கு இவ் அம்புலன்ஸ் சேவை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ 4)

புலிகளின் குரல் வானொலியில்

20 – 09 – 1994
செவ்வாய் இரவு

★ 8-01 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ந. கிருஷ்ணா எழுதிய 'தியாகச்சுடர்' வில்லிசை
★ 8-20 — நலந்தானா - விசர்நாய் கடியினால் ஏற்படும் ஆபத்துக்களுக்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம்- "சிந்தனை"
★ 8-50 — களமும் காலமும் - மறைன்னை எழுதிய "கடலும் கலக்கமும்"

21 – 09 – 1994
புதன் காலை

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30—செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ஜெராட் எழுதிய "புயலிடம் நீதிகேட்ட பூங்காற்று"

தியாகி திலீபன் நினைவாக இன்றைய இரவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 20

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவையொட்டி கோட்டரீதியாக உண்ணாவிரதப் பந்தல்களில் இன்று நடைபெறும் நிகழ்வுகள் வருமாறு:

வலிகாமம் கோட்டம்

★ சுன்னாகம் சிவன்கோயிலடியில் — வாத்தியவிருந்து, பேச்சு, தொடரும் பயணங்கள் (நாடகம்), கிராமிய நடனம்;

★ வடக்கம்பரை அம்மன் கோயிலடியில் — தாளலயம் [உடுவில் வட்டம்], தாயகமே தாகம் [நாடகம்], கரகம், கோலாட்டம்.

★ ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியில்— நாதஸ்வரம், பேச்சு, சிறை [நாடகம்], காவடி, கும்மி.

★ நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில்— வாய்ப்பாட்டுக் கச்சேரி, வாழவைத்த மண் [நாடகம்], கும்மி, கோலாட்டம்.

★ நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில்— வயலின் இசை, பேச்சு, விடியலைத் தேடி (திவக நாடகம்), கோலாட்டம், கும்மி;

தீவகக் கோட்டம்

★ அலியாவளை நாச்சிமார் கோயிலடியில்— தாளம் [நாடகம், உடுவில் வட்டம்], அபிநய நடனம், கும்மி;

வடமராட்சிக் கோட்டம்

★ உடுப்பிட்டிச் சந்தி வைரவர் கோயிலடியில்— பேச்சு, கவியரங்கு (பருத்தித்துறை வட்டம்), கலைஞனின் தாகம் (நாடகம்), கோலாட்டம்;

★ மந்திகை அம்மன் கோயிலடியில் — பேச்சு, வில்லுப்பாட்டு (தம்பிராசன் குழு), தர்ம தேவதை (நாடகம்), கும்மி, காவடி.

★ துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய முன்றலில் — இனியொரு விதி செய்வோம் (நாடகம் தென்ம.), கிராமிய நடனம்.

தென்மராட்சிக் கோட்டம்

★ கைதடிச் சந்தியில் — பேச்சு, கோலாட்டம், உரிமைத் தேர் (நாடகம்), காவடி, கோலாட்டம்.

★ சாவகச்சேரி மணக்குணாப்பிள்ளையார் கோயிலடியில் — பேச்சு, வயலின் கச்சேரி, அணையும் பிறவிகள் (நாடகம்), கும்மி, கோலாட்டம்;

★ கொடிகாமம் இரட்டைக்கேணி அம்மன் கோயிலடியில் — பேச்சு, கவிதைக் காவடி, நெஞ்சம் மறக்குமா? (நாடகம்), கும்மி, கோலாட்டம்.

★ பளை இரட்டைக்கேணி அம்மன் கோயிலடியில் — பேச்சு, புதிதாய் எழுவோம், ஒளி பிறந்தது (நாடகங்கள்), அபிநய நடனம். (க)

இன்று நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி திலீபன் நினைவாக இன்று செவ்வாய்க்கிழமை பல்வேறு வட்டங்களில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பொது அமைப்புகளும் நிறுவனங்களும் வருமாறு:

பருத்தித்துறையில் மந்திகை அம்மன் கோயிலடி, புலோப்பளை ப.நோ.கூ.ச., பருத்தித்துறை தெ.ப.மோ.கூ.ச.

கரவெட்டியில் துன்னாலை கலிகைக் கந்தசாமி கோயில் கரணவாய் ம.ம.வி., பொன்னம்பல வி.

உடுப்பிட்டியில் நாவலடி வைரவர் கோயிலடி. அம்பிகை, கலைபரசி, கலைமகள், விவேகானந்தா, கொம்மாந்துறை ச. ச; நிலையங்கள்.

உடுவில் வர்த்தகர் சங்கம் சுன்னாகம், கிரிசாலி, சிவசக்தி, காமாட்சி அம்மாள் ச. ச. நிலையங்கள்.

சங்கானையில் சங்கானை சிற்றூர் மக்கள்.

சண்டிலிப்பாயில் பண்டத்தரிப்பு சிற்றூர் மக்கள்.

கோப்பாயில் நீர்வேலி இ.த.க. பாடசாலை, கரந்தன் ரகுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி ஆர். சி. பாடசாலை, சிறுப்பிட்டி அ. மி. த. க. பாடசாலை, தென்துளி உற்பத்திக் குழு, நீர்வேலி ச.ச. நிலையங்கள்.

தீவகக் கோட்டத்தில் வேலணை சரவணபவ வி., அல்லைப்பிட்டி பராசக்தி வி, வளியம்மை வீரகத்தி வைரவர் கோயிலடி குடியிருப்புகள்.

தென்மராட்சி கைதடியில் மின்னொளி, காந்தி ச. ச. நிலையங்கள்.

சாவகச்சேரியில் சரசாலை மட்டுவில், மட்டுவில் நுணாவில் சிற்றூர் ஒன்றியம், சமூக மேம்பாட்டு ஆசிரியர்கள்.

கொடிகாமத்தில் கருணாபுரம் மந்துவில், கின்னச் சந்தையடி மரக்கார் ச.ச.நி., புத்தூர் சந்தி வர்த்தகர் சங்கம்.

பளையில் அரசக் குடியிருப்பு, புலோப்பளை மேற்கு மக்கள், பிரதாபன் ச.ச.நி.

நல்லூரில் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் யாழ்ப்பாண மாநகரசபை, அத்தியடி மாதர் சங்கம். (க)

மலத்தியோனுக்கு பதில் மாற்று மருந்து

குடாநாட்டில் மலேரியா அபாயம்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். குடாநாட்டுக்கு தற்போதைக்கு மலத்தியோன் வந்து சேராது.

மலத்தியோனைத் தருவிப்பதற்காக சமீபத்தில் கொழும்பு சென்ற வட பிராந்திய மலேரியாத்தடுப்புப் பகுதி அத்தியட்சகர் டாக்டர் கே. சிவகுரு ஏமாற்றத்துடன் திரும்பி உள்ளார்.

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் இருந்த மலத்தியோன் கையிருப்பு முடிவடைந்த நிலையிலேயே அவர் கொழும்பு சென்றிருந்தார்.

தென்பகுதியில் மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் தம்புத்தேகம மலத்தியோன் களஞ்சியத்தில் மலத்தியோன் கையிருப்பு முடிவடைந்ததே வடக்குக்கு மலத்தியோன் அனுப்புவதில் தடங்கல் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மலத்தியோனை முன்னர் வெளிநாட்டிலிருந்து. தருவித்து மலேரியாத் தடுப்பு இயக்கத்திற்கு கொடுத்த முகவர் ஒருவர் தரம் குறைந்த மலத்தியோனை கொடுத்துள்ளதாக தெரிய வந்ததை அடுத்து மலத்தியோன் கொள்வனவு கொழும்பில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக ஐக்கொன் (Icon) என்ற புதிய மருந்து தற்போது தென் பகுதியில் மலேரியா நுளம்பு அழிப்பதற்கு பாவிக்கப்பட்டு வந்தது.

இம் மருந்தை கொள்வனவு செய்வதிலும் கூறுவிலை கோராமல் நேரடியாக முகவர் ஒருவர் மூலம் கொள்வனவு செய்ததினால் சுகாதாரத் திணைக்களத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

இது பற்றிய விசாரணைகள் கொழும்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் இம் மருந்தும் யாழ்ப்பாணத்திற்கு தற்போதைக்கு அனுப்பப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக நுளம்பு குடம்பி அழிப்பு மருந்தான 'எபேற்' (Abate) என்ற மருந்தும் 20 லீற்றர் மட்டும் தற்போது யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இம் மருந்தும் முற்று முழுதாக நுளம்பு ஒழிப்புக்கு போதாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் எதிர்வரும் மழைகாலத்தில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

தாக்குதலில் காயம்

யாழ்ப்பாணம், செப். 20

வயல் விதைப்புத் தொடர்பாக ஏற்பட்ட தகராறு மண்வெட்டி, கத்தி வெட்டில் முடிந்தது

சம்பவத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அமிர்தநாதன் [வயது 49] என்பவரே காயமடைந்தவராவார். [இ-15]

லஞ்ச விசாரணையில் இருந்து தப்ப

அரசின் உதவியை நாடுகின்ற ஐ.தே.க அரசியல்வாதிகள்

கொழும்பு, செப். 20

லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளில் சிக்காது தப்புவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உயர் நிலை அரசியல்வாதிகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தலைமைப்பீடத்தின் உதவியை நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் நிரந்தர லஞ்சஆணைக் குழுவின் விசாரணைக்கு தங்களை உட்படுத்த வேண்டாம் என்று அவர்கள் அரசுத் தலைமைப்பீடத்துக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று "த ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

எனினும் இவர்களின் கோரிக்கைகளை அரசுத் தலைமை நிராகரித்து விட்டதாக, தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி த 'ஐலண்ட்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [எ]

அமைச்சரை பிணையில் விடும்படி கோரும் மனு

இன்று விசாரணைக்கு வருகிறது

கொழும்பு, செப். 20

கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னியை பிணையில் விடுவிக்கக்கோரும் மனுவை இன்று விசாரிக்கப் போவதாக பதுளை மேல்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் தினத்தன்று ஐ. தே. க. ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பிரதி அமைச்சரை இம் மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பதுளை நீதிவான் அண்மையில் தெரிவித்தார்.

இதனை அடுத்து திருமதி சமரவீர பிணை மனு ஒன்றை மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அந்த மனுவே இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. [இ-எ]

மகாராஷ்டிர...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரத்தை அவரின் அரசியல் எதிரிகள் பயன்படுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரத்பவாரை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் அவர் மீது சோனியா காந்திக்கு எரிச்சல் ஏற்படுத்த காங்கிரஸுக்குள் இருக்கும் ஒரு பிரிவு முயற்சி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

ஆனந்த மருத்துவ நிலையம்
HAPPY MEDICAL CENTRE

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? உடல் மெலிவா? உடல்பருமனா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? மலேரியாவா? நீரிழிவா? தொய்வு வியாதியா? சருமவியாதியா? குழந்தைகளின் ரோகங்களா? மாதர்களின் ரோகங்களா? கவலை வேண்டாம் சிறந்த சிகிச்சை, அரிய ஆலோசனை அளிக்கப்படும்.

தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை

டாக்டர் த. சிவானந்தன்
ஆனந்த மருத்துவ நிலையம்
ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தலைமை: சிவா வைத்தியசாலை
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
தினமும் – பி. ப. 3-00 – 6 வரை
(32968)

விற்பனைக்கு

சகல அளவுகளிலும் பொலித்தீன் ஷீற், சொப்பிங் பாக், நயிலோன் கயிறு, பிளாஸ்ரிக் ஜக், பிளாஸ்ரிக் வாட்டர் ஜக், பிளாஸ்ரிக் பேசின், கோழிக்கூட்டுக்கான இரும்புவலை, அலுமினியத் தாச்சி, எனாமல் பெயின்ற் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

நாதன் களஞ்சியம்,
213.C கேணல் கிட்டு சாலை,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.
(32967)

முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பண்டத்தரிப்புக் கோட்டம்

நாளை 21. 09. 94 புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்பு, கவின்கலை வகுப்பு ஆசிரியர்கள் அனைவரையும் சங்கானை வட்டத் தலைவர் மதியண்ணா அவர்கள் சந்தித்து கலந்துரையாட இருப்பதால் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நன்றி
செயலாளர்
பண்டத்தரிப்புக் கோட்டம்.
(சி/9210)

தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு உணவு வகைகள், சிற்றுண்டிகள், பம்பே சுவீற்ஸ் என்பன செய்யக் கூடிய ஆட்கள் தேவை. 05 வருட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

27 – 09 – 1994க்கு முன்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி!
விளம்பர இல- 694
மே/பா உதயன்.
(சி-9208)

தடுப்பு காவலில் உள்ளோர் பற்றி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, செப். 20

அவசரகாலச் சட்டவிதிகள் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றி விசாரிப்பதற்கு நீதி, அரசமைப்பு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நியமித்துள்ள ஐவரைக் கொண்ட குழு கடந்த 14 ஆம் திகதி தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜே. எவ். ஏ. சூசா இக்குழுவின் தலைவராவார். ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் சிவா செல்லையா, சட்டத்தரணி ஆன்ஸ்லே சமரஜீவா, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஏ. ஆர். சி. பெரேரா, சிரேஷ்ட அரச சட்டத்தரணி கோவிதா தர்மவர்த்தன ஆகியோர் இக்குழுவின் இதர உறுப்பினர்கள் ஆவர்.

தடுப்புக் காவலில் உள்ள ஒவ்வொருவருக்கும் எதிரான சாட்சியங்களை மீளாய்வு செய்து, எதிராக போதிய சாட்சியம் இல்லாதவர்களை விடுதலை செய்யக்குழு சிபாரிசு செய்யும்.

மூன்று மாத காலத்துக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு குழு கேட்கப்பட்டுள்ளது என அமைச்சர் பீரிஸ் கூறினார்.

சுமார் 650 பேர் நீண்டகாலமாகத் தடுப்புக் காவலில் இருப்பதாக சட்டமா அதிபர் அலுவலகத்துக்குத் தெரியவந்துள்ளது. ஆனால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் உண்மையான எண்ணிக்கை சற்றுக் கூடுதலாக இருக்கலாம் என்று அமைச்சர் சொன்னார். (உ-க)

ஆலயங்களில்

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலயசப்பல் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். (எ-173-

லான்ட்மாஸ்ரர் மோதி சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், செப். 20

[illegible] கட்டிய சைக்கிளைப் பிடித்துக் கொண்டு வீதி ஓரமாக நின்றவரை லான்ட் மாஸ்டர் மோதியதில், சைக்கிளைப் பிடித்துக் கொண்டிருந்தவர் படுகாயமடைந்தார்.

மிருசுவிலில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து நாவற்குழியில் வசித்துவரும் தியாகராசா தயானந்தன் (வயது 12) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். [இ-15]

நாய் பிடிப்பது இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். மாநகர சுகாதார பகுதியினர் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலையைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளனர்.

நாய்களை புதைப்பதற்கு உரிய இட வசதி இல்லாததாலேயே நாய் பிடிப்பதை இடைநிறுத்தி வைப்பதென முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

சிகை அலங்கரிப்பு; இன்று விடுமுறை

குருநகர், செப். 20

தியாக தீபம் திலீபனின் 7ஆம் ஆண்டு தொடர் நினைவு நிகழ்வுகளையொட்டி வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ். கிளை, இன்றைய தினத்தை விடுமுறை தினமாக அறிவித்துள்ளது.

அன்றைய தினம் யாழ் ஒட்டுமடம் பகுதியில் நடைபெறும் சிரமதானப் பணியிலும் சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்வர் [ஒ 51)

புலிகள் • அரசு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பெரும் தொகையான பணம் செலவாகும்.

இவ்வாறு இலங்கை மின்சாரசபைத் தலைவர் தெரிவித்ததாக ''லங்காதீப'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

ஜே. வி. பியின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கின்றார். ஏனையோர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்டு விட்டார்கள்.

வேறொரு பெயரில் லண்டனில் இருந்து இரகசியமாக இலங்கை திரும்பியுள்ளதாகக் கருதப்படும் திரு. அமரசிங்கவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜே. வி. பியின் வேட்பாளராகப் போட்டியிடலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உண்மையான ஜே. வி. பி இயக்கம் தங்களுடையதே என்று பல பிரிவுகள் அங்கீகாரம் கோரி தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்திருந்தன. (எ)

TOEFL

TOEFL- Tapes Notes Study Materials Etc. Repuired. Contact-
Director,
School of Business
Admi[illegible]
16, 3rd Cross Street,
Jaffna.
(சி-9206)

காஷ்மீருக்கு கூடிய சுயாட்சி அதிகாரம் வழங்கத் தயார்

உள்துறை இணையமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, செப். 20

காஷ்மீருக்கு கூடிய சுயாட்சி வழங்க இந்தியா தயாராக உள்ளது.

இந்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கடந்த 18ஆம் திகதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்துக்கும் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சரான பாரூக் அப்துல்லாவுக்கும் இடையில் இவ்வாரம் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளின்போது சுயாட்சிப் பிரச்சினை கவனத்தில் எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஏற்கனவே கணிசமானளவு சுயாட்சியைக் கொண்டுள்ளது. அதற்குச் சொந்த அரசியல் யாப்பும் உண்டு. மேலும் சுயாட்சி அதிகாரம் சேர்க்கப்பட வேண்டுமானால் அதற்கு அரசாங்கம் தயங்கப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

இந்திய அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியுடனும் சர்வதேச மன்னிப்புச்சபையுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் சொன்னார். (க)

நோர்வே செஞ். சங்கம்

மனிதாபிமான உதவிகள் தொடரும் என அறிவிப்பு

கொழும்பு, செப். 20

நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடனான கூட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது எனினும் அதன் மனிதாபிமான உதவிச் செயல் திட்டங்களை தொடர்ந்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக செயல்படுத்திவரும் என்று அறிவித்திருக்கிறது.

இது தொடர்பான பத்திரிகைகளுக்கான செய்தி கூறுவதாவது:

இலங்கை மக்களுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி சகல மட்டங்களிலும் தொடர்ந்தும் வழங்கப்படவரும். தேசமயம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சகல நடவடிக்கைகள் தொடர்பான பூரணமான அறிக்கை ஒன்றை அது கோரியுள்ளது. அவ்வறிக்கையைக் கவனமாக ஆராய்ந்ததன் பின்பே அதனுடனான சகல நடவடிக்கைகளையும் மீண்டும் ஆரம்பிப்பது குறித்துப் பரிசீலனை செய்யும். (ஏ)

மாணவி முதலிடம்

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவை ஒட்டி அகில இலங்கை இந்துமன்றம் கொழும்பில் நடத்திய கட்டுரைப் போட்டி—ஆரம்ப பிரிவில் — ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை மாணவியான சக்தி சிவசத்தியபாலன் ஜீத் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். அண்மையில் கொழும்பில் நடந்த வைபவத்தில் இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது (ஐ)

மீளக் குடியமர்த்தல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருக்க புனர்வாழ்வு மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் மறுபுறத்தில் நடந்து கொண்டிருக்கும்.

அகதிகள் நலன்களைக் கவனிப்பது அவர்களை மீளக்குடியமர்த்துவது ஆகியன பிரச்சினைக்கான தீர்வில் தங்கியிருக்க மாட்டா.

அகதிகளின் புனர்வாழ்வு, மீளக்குடியமர்வு என்பவை சம்பந்தமாக எமது அரசு குறிப்பாக எனது அமைச்சு புதிய கொள்கை ஒன்றை வகுப்பதில் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

புதிய கொள்கையும், அதற்கேற்ற திட்டங்களும் வகுக்கப்பட்டதும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும்வரை காத்திருக்காமல் அவற்றைச் செயற்படுத்துவோம்.

மக்களை அவர்களின் முந்திய வாழ்விடங்களிலேயே மீளக் குடியமர்த்தவே முதலிடம் அளிக்கப்படும். பாரம்பரிய மீளக்குடியமர்வு முறைகளை இயன்ற அளவு செயற்படுத்துவோம்.

அதற்குள் அடங்க முடியாதவர்களை வேறு இடங்களில் அவர்களின் விருப்பத்துடன் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

முஸ்லிம் அகதிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் பிரச்சினை விசேடமானதாகும். அவர்கள் வடக்கிலிருந்து தமது வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்டவர்கள்.

எனவே அவர்களை புதிய இடங்களில் மீளக்குடியமர்த்துவது குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும்.

திருகோணமலையில் பல அகதி முகாம்களுக்குச் சென்று பார்த்தோம். அவர்களின் நிலைமிகவும் மோசமாக உள்ளது. வர்ணிக்க முடியாத அளவுக்கு [illegible]னது என்று அமைச்சர் அஷ்ரப் சொன்னார் (ஏ)

ஐ தே. கவின்

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் எதிரணியைச் சேர்ந்த ஜனாதிபதி, எவ்வாறு அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு மற்றும் இரகசியங்களைப் பேணப்போகிறார்?

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்போது, தமது சகாக்களுடன் அமைச்சரவை இரகசியங்களை பகிர முடிந்திருக்கமாட்டாரா?

—இவ்வாறு ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ஒ-எ)

ஆழம் காணமுடியாத...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோடி ரூபா என்கிறார்கள். முறையான கணக்கு வழக்குகள் திறைசேரியில் இல்லை போல் தெரிகிறது'' — என்றார் பிரதமர்.

''சிறிது நேரம் யோசித்து விட்டு, புதிதாக [illegible] திறைசேரி அதிகாரிகள் இருந்[illegible] புதிதாக [illegible]சிடக் கூடாது என்று ம[illegible] — என்றும் பிரதமர் தெரிவித்தார். (ஒ-எ)

பாடசாலைகளில் கலைக்கழகங்கள்

கொழும்பு, செப். 20

நாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் கலைக்கழகங்களை அமைக்கும்படி பிரதமர் சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

மாணவர் மத்தியில் கலை உணர்வை வளர்க்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பிரதமரின் உத்தரவு விரைவில் அமுல் செய்யப்படும் என கலாசார, மத விவகார அமைச்சர் தெரிவித்தார்.

சுதேசிய இசை நடன, நாடகக்கலைகளை விருத்தி செய்யும் பணியில் இக்கலைக்கழகங்கள் ஈடுபடும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

கொலை, ஆட்கடத்தல் வழக்கு;

ஐ. தே. க. எம். பிக்கு எதிராக மேல் நீதிமன்ற விசாரணை

கொழும்பு, செப். 20

இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. க. எம்.பி. சுசந்த புஞ்சிநிலாமைக்கு எதிரான கொலை, ஆட்கடத்தல் வழக்கு மேல் நீதிமன்ற விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் இவ்வழக்கின் பூர்வாங்க விசாரணை நடந்தது. விசாரணை முடிவில் முதலாவது எதிரியான புஞ்சிநிலாமையை மேல் நீதிமன்ற விசாரணைக்கு நிற்கும்படி பிரதம நீதிவான் சரத் அம்பேபிட்டிய உத்தரவிட்டார். ஏனைய 10 எதிரிகளும் போதிய சாட்சியங்கள் இன்மையால் விடுதலை செய்யப்பட்டனர்.

இக்குற்றச் சம்பவம் 23-10-1988இல் இடம்பெற்றது. (எ)

காமினிக்கு செயலாளர் பாலித பெல்பொல

கொழும்பு, செப். 20

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவின் செயலாளராக திரு பாலித பெல்பொல என்பவரை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது. காமினி திஸாநாயக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க இம்முடிவு எடுக்கப்பட்டது. (ஓ-எ-6)

மரண அறிவித்தல்கள்

கு. சின்னத்தம்பி

(ஆயுள் வேதவைத்தியர், மகேஸ்வரன் வைத்தியசாலை, சாவகச்சேரி)

சரசாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட கு. சின்னத்தம்பி (வைத்தியர்) அவர்கள் 19-9-94 அன்று காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மகேஸ்வரனின் (ஆயுள்வேத வைத்தியர்) அன்புத் தந்தையும், திருமதி பிறக்சிஸ் மகேஸ்வரனின் (ஆசிரியை, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்) மாமனாரும், கணபதி, காலஞ்சென்றவர்களான சின்னையா, சுப்பையா ஆகியோரின் சகோதரரும், டனீசியா சுலோசனா (ஆசிரியை, புனித அந்தோனியார் வித்தியாலயம், பாஷையூர்), பெவிசியா கோமதி, தினேஸ்குமார் (புனிதசம்பத்திரிசியார்கல்லூரி), காலஞ்சென்ற சதீஸ்குமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-9-94) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
மகேஸ்வரன் குடும்பத்தினரும்,
பெறாமக்கள் குடும்பத்தினரும்
சரசாலை.
(32963)

திருமதி

தியாகேசபிள்ளை சிவகாமிப்பிள்ளை

உரும்பராய் வடக்கைச் சேர்ந்த திருமதி தியாகேசபிள்ளை சிவகாமிப்பிள்ளை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகேசபிள்ளையின் அன்பு மனைவியும், சிவயோகம், சிவனேஸ்வரி, சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமி, இரகுநாதன், சிவசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனலக்குமி, ஜெயலக்குமி, விஜயலக்குமி, விக்னேஸ்வரன், ஆனந்தராஜ், கேசவன், ஜமுனா, சுதர்சன் சுகந்தி, சுகந்தன், சுவப்பிரியா, யாழினி, பிருந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு தகனக்கிரியைக்காக உரும்பராய் எருவன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி சிவனேஸ்வரி
உரும்பராய் வடக்கு.
(32970)

திருமதி குகநாதன் இரத்தினேஸ்வரி

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியைச் சேர்ந்த குகநாதன் (இந்திரன்) இரத்தினேஸ்வரி நேற்றுக் காலை மரணமானார்.

அன்னார் இ. குகநாதன் (இந்திரன்) இராஜலக்சுமி ஸ்ரோர்ஸ், மூன்றாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், தாமரத்தினம் — பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மகளும், புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற த. இராசையா — லட்சுமி தம்பதியின் அன்பு மருமகளும் —

துவாரகன், திவாகன், திலக்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ்வரி, வாசுகி, ஜெகதீஸ்வரன், ரமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரம்பலம், காலஞ்சென்ற மனோன்மணி, மனோராணி, ஜெகன்நாதன் (பிரான்ஸ்) மனோரஞ்சிதம், நாகேஸ்வரி, தங்கேஸ்வரி, லோகநாதன் (டென்மார்க்), காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குகநாதன் (இந்திரன்)
கணவன்

23, மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
(32971)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 328/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.